Paper ID: IC04

# "சமூக புனரமைப்பில் மஸ்ஜித்கள் ஆற்ற வேண்டிய பங்களிப்பு - கெகிராவை பிரதேச ஜும்ஆ மஸ்ஜித்களை மையப்படுத்திய ஆய்வு"


**Nairoos MHM.[1], Ismiya Begum MS.[2], Safnas I.[3]**

[1]Head of the department, department of Islamic Studies, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.
[2]Teacher A/Gomarankall MV
[3]Student of specialization in Islamic Banking and Finance, Department of Islamic Studies, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.
nairoosmhm@gmail.com, izzahis123@gmail.com , safnas1992@gmail.com



**ஆய்வுச் சுருக்கம்**

முஸ்லிம் சமூகத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் செவ்வனே நிறைவேற்றக் கூடிய முக்கிய கேந்திர ஸ்தலங்கள் மஸ்ஜித்கள் என்ற அடிப்படையில் அவை வணக்கவழிபாடுகள் என்ற நிலையைத் தாண்டி சமூகத்துக்கு எவ்வாறான பங்களிப்புக்களை ஆற்ற வேண்டும் என இன்று சகலதரப்பினராலும் எழுதப்பட்டும் பேசப்பட்டும் வந்த போதும் ஆய்வுப்பிரதேசத்தில் அமைந்திருக்கின்ற மஸ்ஜித்களின் சமூகப் புனரமைப்புப்பணிகள் ஏன் போதியதாக இல்லை என்ற ஆய்வுப்பிரச்சினையை அடிப்படையாகக்கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்காக கெகிராவைப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஐந்து ஜும்ஆ மஸ்ஜித்கள் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாய்வானது குறிப்பிட்ட பிரதேசத்தில் மஸ்ஜித்களின் பணி முஸ்லிம்களின் சகல துறைளையும் மையப்படுத்தியதாக போதிய அளவில் இடம்பெறுகின்றனவா என்பதனை குறித்த ஆய்வுப்பிரதேச மக்களின் திருப்தி நிலை ஊடாக ஒப்பீட்டடிப்படையில் கண்டறிந்து விளக்குவதனை முதன்மை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அவற்றின் பணி ஆய்வுப்பிரதேசத்தில் போதியதாக இல்லாவிட்டால் அதற்கான காரணங்களை கண்டறிவதனையும், எதிர்காலத்தில் மஸ்ஜித்கள் ஊடாக குறிப்பிட்ட பிரதேசத்தில் புனரமைப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கான திட்டங்களை ஆலோசனைகளாக முன்வைப்பதனையும், இவ்வாய்வு துணை நோக்கங்களாகக் கொண்டுள்ளது. ஆய்வுப்பிரதேசத்தில் இவ்வாறானதோர் ஆய்வு இடம்பெறவில்லை என்ற அடிப்படையில் இவ்வாய்வு இடைவெளியை குறை நிரப்புவதில் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது. இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் தரவு மூலாதாரங்களினைப் பயன்படுத்தி அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வு முறைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதனிலைத் தரவுகள் வினாக்கொத்து,நேர்காணல் மூலமும், இரண்டாம் நிலைத்தரவுகள் நூல்கள்,சஞ்சிகைகள், இணையத்தள,பத்திரிகை ஆக்கங்கள் மூலமும் பெறப்பட்டுள்ளன. வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட தரவுகள் ளீளுளுஇநுஒஉநட ஆகிய மென்பொருட்களின் துணையுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.இவ்வாய்வின் மூலம் குறிப்பிட்ட ஆய்வுப்பிரதேசத்தில் பெரும்பாலான மஸ்ஜித்களின் புனரமைப்புப்பணியில் மக்கள் போதிய திருப்தி கொள்ளவில்லை எனவும் அதற்கு நிர்வாக ஒழுங்கீனம், பிரதேச மக்களின் ஆர்வமின்மை, ஐக்கியமின்மை, இயக்கம் சார்பிரச்சினைகள் என பல விடயங்கள் காரணங்களாக அமைந்துள்ளன எனவும் கண்டறியப்பட்டது. ஆய்வுப்பிரதேசத்தில் மஸ்ஜித்களின் பணியை மேம்படுத்துவதற்காக திட்டமிட்ட அடிப்படையில் மஸ்ஜித்களின் நிர்வாகப் பணிகளை விரிவுபடுத்துவதற்கான நடைமுறைகளை அமுல்படுத்துதல்,மஸ்ஜித்களின் பல்துறைசார் சமூகப்பணி குறித்த விழிப்புணர்வூட்டல் போன்றன ஆலோசனைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.



**திறவுச்சொற்கள் :** மஸ்ஜித்கள், சமூகப்புனரமைப்பு, முஸ்லிம், சமூகம், பங்களிப்பு

**அறிமுகம்**

முஸ்லிம் சமூகத்தின் சிறப்புவாய்ந்த கேந்திர ஸ்தலம் மஸ்ஜித்களாகும். முஸ்லிம் ''சமூகத்தின் இதயமாகவும் உயிரோட்டமாகவும் அச்சாணியாகவும் திகழும் மஸ்ஜித்கள் நீண்ட கால வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டிருப்பதோடு முஸ்லிம் சமூகத்தில் அளவிடற்கரிய செல்வாக்கை செலுத்தக் கூடிய ஸ்தாபனங்களாகவும் விளங்குகின்றன.''(ஸீ.எம்.ஏ அமீன்: 1999)

இன்று முஸ்லிம்கள் சகல துறைகளிலும் பின்னடைவுகளை எதிர்நோக்கியுள்ளமைக்குப் பிரதான காரணம் அவர்கள் மஸ்ஜித்களை விட்டும் அந்நியமாகியிருப்பதே எனவே முஸ்லிம் சமூகத்தின் அனைத்து நடைமுறைகளும் மஸ்ஜித்களை மையப்படுத்தி அமைவதன் மூலமே ஆரோக்கியமான சமூகமொன்றினை கட்டியெழுப்ப முடியும் இதற்கு பொறுத்தமானதோர் நிறுவனம் மஸ்ஜிதாகும்..

மஸ்ஜித்கள் எனப்படும் இறையில்லங்கள் முஸ்லிம் சமூகத்தின் உயிர்நாடி என்றவகையில் இஸ்லாமிய வரலாற்றில் வணக்க வழிபாடுகளை நிறைவேற்றல் என்ற நிலையைத் தாண்டி அறிவுப்பணி,அரசியல் பணி, சமூகப்பணி, தனிமனித உருவாக்கம்,ஆன்மீக விருத்தி, பண்பாட்டு சீர்திருத்தம், பொருளாதார நடைமுறைகள், கலந்தாலோசனை, நீதி செலுத்தல்,சர்வதேச உறவுகளைப் பேணல் என பல உயர்ந்த நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டன. இந்த அடிப்படையில் இஸ்லாமிய வரலாற்றில் குடும்ப, சமூக விவகாரங்கள் குறித்த கலந்துரையாடல்கள், அரசியல் விவாதங்கள், பொருளாதார சீர்திருத்தம், சமூக ஐக்கியம் இராணுவ பாசறை, கல்விச்சீர்திருத்தம் பண்பாட்டுப்பயிற்சியளித்தல், நீதி செலுத்தும் சட்டமன்றமாக இயங்குதல், சீரசிருத்த சபையாக இயங்குதல் என அவற்றின் பணிகள் விரிவபடுத்தப்பட்டிருந்தன. ஏனெனில் முஸ்லிம் சமூகம் வரலாற்றில் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு மஸ்ஜித்களின் மேற்குறிப்பிட்ட பணிகள் தீர்வாகவும் வெற்றியாகவும் அமைந்தன. மஸ்ஜிகளின் பணி வெறும் வணக்கவழிபாடுகளுக்குள் மாத்திரம் எப்போது கட்டுண்டு முஸ்லிம்கள் தமது அனைத்து நடைமுறைகளையும் மஸ்ஜிதை விட்டு தூரமாகினார்களோ அன்றே வாழ்வின் அனைத்து துறைகளிலும் அவர்கள் வீழ்ச்சியையே சந்தித்தார்கள் என்பது இஸ்லாமிய வரலாறு புகட்டும் பாடம். ஏனெனில் முஸ்லிம்களைப் பொறுத்த அளவில் ஒவ்வொரு தனிமனிதனையும் இஸ்லாமியமயப்படுத்தி அதன் மூலம் ஆரோக்கியமுள்ள ஒரு சமூகத்தை உருவாக்குவதில் பங்காற்றக் கூடிய ஒரு பொருத்தமான நிறுவனம் மஸ்ஜிதை தவிர வேறொன்றும் இருக்க முடியாது.

முஸ்லிம்கள் அந்நிய சமூகத்தோடு இரண்டறக் கலந்து வாழும் போது பல்வேறு வகையான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அவற்றுக்கானசரியான தீர்வினைப் பெற்றுக் கொள்வதும் இஸ்லாம் பற்றிய அந்நிய சக்திகளினால் தொடுக்கப்படும் கேள்விளுக்கு சரியான புரிதலினை வழங்குவதும் முஸ்லிம் சமூகத்தின் கட்டாய கடமையாகும். முஸ்லிம் சமூகத்தைப் பீடித்துள்ள வறுமை, கல்வியில் பின்னடைவு ஒழுக்க, பண்பாட்டு வீழ்ச்சி, அரசியல் தேக்கம், குடும்பங்கள் சீர்குலைவு, ஐக்கிமின்மை, ஆன்மீக வறுமை போன்றவற்றுக்கு சரியான தீர்வினைப் பெற்றுக் கொடுக்கவும் மஸ்ஜித்கள் முன்வர வேண்டும் என பல தரப்பினராலும் எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறான பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்க சக்தி பெற்றுள்ள ஒரேயொரு நிறுவனம் மஸ்ஜித் என்பதனை முஸ்லிம் புத்தி ஜீவிகள் அறிவர். இதனால்தான் அவற்றை செவ்வனே நிறைவேற்ற மஸ்ஜித்கள் எவ்வாறான பங்களிப்புக்களை ஆற்ற வேண்டும் என்பது குறித்து ஊடகங்கள் வாயிலாகவும், நூல்கள், ஆக்கங்கள் வாயிலாகவும் எழுதியும் பேசியும் வருகின்றனர். ஆனால் அவை எந்த அளவு மஸ்ஜித்கள் மூலம் அமுலபடுத்தப்பட்டு வருகின்றன என்பது ஆய்வுக்குரிய விடயமாகும். இலங்கையில் இதுவரை முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு

செய்யப்பட்டதற்கிணங்க 2400 மஸ்ஜித்கள் உள்ளன. (மீள்பார்வை: இதழ் 363:2017, பக்:10) இவற்றுள் ''1000 ஜும்ஆ மஸ்ஜித்களாகும்'' (மீள்பார்வை:இதழ் 364: 2017, பக்:05) ''அநராதபுர மவவட்டத்தில் மாத்திரம் 95 மஸ்ஜித்கள் அமைந்துள்ளன. அவற்றுள் 87 மஸ்ஜித்கள் ஜும்ஆ மஸ்ஜித்களாகும்''. .(ஆ.ஐ.ஆ முஹிதீன்:2014) அவற்றுள் கெகிராவைப் பிரதேசத்தில் மாத்திரம் 7 ஜும்ஆ மஸ்ஜித்கள் அமைந்துள்ளன.

இவை அனைத்தும் மேற்குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்ளவில்லை என்று கூறுவதனை விட அறைறின் பணி போதியதாக இல்லை என்பதே உண்மையாகும். மஸ்ஜித்களின் பணி சகல துறைகளையும் மையப்படுத்தி இன்னும் விரிவுபடுத்தப்படவேண்டிய தேவைப்பாடு உள்ளது. எனவே அதனை கருத்திற் கொண்டு ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள கெகிராவைப் பிரதேத்தில் மாத்திரம் அமைந்துள்ள ஏழு முஸ்லிம் கிராமங்களில் இருந்து எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட ஐந்து ஜும்ஆ மஸ்ஜித்களை மைய்படுத்தி குறிப்பிட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள மஸ்ஜித்களின் பணி முஸ்லிம்களின் சகல துறைளையும் மையப்படுத்தியதாக போதிய அளவில் இடம்பெறுகின்றனவா என்பதனை குறித்த ஆய்வுப்பிரதேச மக்களின் திருப்தி நிலை ஊடாக ஒப்பீட்டடிப்படையில் கண்டறிந்து விளக்குவதனை முதன்மை நோக்கமாகவும் அவற்றின் பணி போதியதாக இல்லாவிட்டால் அதற்கான காரணங்களை கண்டறிதல், குறிப்பிட்ட பிரதேச மக்களின் அன்றாட வாழ்வியல்சார் நடைமுறைகளை மஸ்ஜித்கள் ஊடாக மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல் போன்றவற்றை துணை நோக்கங்களாகவும் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வினை செவ்வனெ நிறைவேற்ற முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வுப்பிரச்சினை**

சமூகப் புனரமைப்பில் மஸ்ஜித்கள் ஆற்ற வேண்டிய பங்களிப்பு போதியதாக இல்லை.

**ஆய்வின் நோக்கங்கள்**

**முதன்மை நோக்கம்**

- ஆய்வுப்பிரதேசத்தில் அமைந்திருக்கின்ற ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மஸ்ஜித்கள் சமூகத்தின் சகல துறைகளையும் மையப்படுத்தி புனரமைப்பு பணிகளை போதிய அளவு முன்னெடுக்கின்றதா என்பதனை மக்களின் மஸ்ஜித்களின் பணிகள் குறித்த திருப்திநிலை ஊடாக கண்டறிந்து விளக்குதல்.

**துணை நோக்கங்கள்**

- ஆய்வுப்பிரதேசத்தில் அவற்றின் பணி போதியதாக இல்லாவிட்டால் அதற்கான காரணங்களைக் கண்டறிதல்
- குறிப்பிட்ட பிரதேச மக்களின் அன்றாட வாழ்வியல்சார் நடைமுறைகளை மஸ்ஜித்கள் ஊடாக விரிவுபடுத்துவதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல்.

**ஆய்வு இடைவெளி**

முஸ்லிம் சமூகத்தின் புனரமைப்பிற்கு மஸ்ஜித்கள் ஆற்ற வேண்டிய பங்களிப்புக்கள் குறித்து பல ஆக்கங்களும் ஆய்வுகளும் வெளிவந்த போதும் ஆய்வுப் பிரதேசத்தைப் பொறுத்தவரை இவ்வாறான

ஆய்வு முயற்சிகள் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. இவ்வாய்வு இடைவெளியைக் கருத்திற்கொண்டதாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**முன்னைய ஆய்வுகளின் கண்ணோட்டம்**

**Muhideen M.I.M என்பவரால் எழுதப்பட்ட "*Hand book to Resolve Anti-Muslim activities By the Sinhala Budhist Supporters of Bodu Bala Sena and Jathika hela Urumaya In Srilanka*"** எனும் நூலில் இலங்கையில் அமைந்திருக்கின்ற மஸ்ஜித்களின் எண்ணிக்கைகள் மாவட்ட அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன.

Seikh M.saleh al –Qazzaz 1975 என்பவரால் எழுதப்பட்ட **The Voice of islam "*The Role of Mosque in Muslim Society*"**எனும் தலைப்பில் எழுதப்பட்ட சஞ்சிகை ஆக்கத்திலும் **Muhammad Hussein Dahal** என்பவரால் எழுதப்பட்ட ***"The role of mosque in a muslim society"*** எனும் தலைப்பில் எழுதப்பட்ட சஞ்சிகை ஆக்கத்திலும் ஏ.பீ.எம் அலியார் **(2015) என்பவரா**ல் எழுதப்பட்ட **"சமூக புனரமைப்பில் மஸ்ஜிதுகளின் பங்கு"** எனும் தலைப்பின் கீழ் மீலாத் சிறப்புமலரில் எழுதப்பட்ட கட்டுரையொன்றிலும் இஸ்லாமிய வரலாற்றில் மஸ்ஜித்கள் ஆற்றிய பங்களிப்புக்கள் பற்றியும் சமகாலத்தில் மஸ்ஜித்கள் ஆற்ற வேண்டியபல்துறைசார் பணிகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளன.

நௌஸாத், ஏ.எஸ்.எம். என்பவர் ***"ஊரை இஸ்லாமியமயப்படுத்துவதில் மஸ்ஜிதின் பங்களிப்பு"*** எனும் தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையொன்றில் இலங்கையில் அமைந்திருக்கின்ற மஸ்ஜித்கள் ஆற்ற வேண்டிய பொருளாதார, சமூக, கல்வி, அரசியல், ஒழுக்கம், சுகாதாரம் என பல்துறைசார் விடயங்களில் ஆற்றவேண்டிய பங்களிப்பு குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியலும் தரவு சேகரிப்புக்களும்**

இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் தரவு மூலாதாரங்களினைப் பயன்படுத்தி அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வு முறைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதனிலைத் தரவுகள் வினாக்கொத்து (Questionnaire),நேர்காணல் (Interview) மூலமும்,இரண்டாம் நிலைத்தரவுகள் நூல்கள்,சஞ்சிகைகள், இணையத்தள,பத்திரிகை ஆக்கங்கள் மூலமும் பெறப்பட்டுள்ளன. வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட தரவுகள் SPSS,MS Excel ஆகிய மென்பொருட்களின் துணையுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

இவ்வாய்வுக்காக கெகிராவைப் வலயத்திற்குட்டபட்ட ஏழு முஸ்லிம் கிராமங்களில் அமைந்திருக்கும் ஐந்து ஜும்ஆ மஸ்ஜித்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. சமூகத்திற்கு மஸ்ஜித்கள் ஆற்றவேண்டும் என எதிர்பார்க்கப்படும் சில விடயங்கள் ஆய்வாளனால் தொகுக்கப்பட்டு தத்தமது பிரதேச மஸ்ஜித்களின் பணி அந்த விடயங்களில் எந்த அளவு திருப்தியளிக்கின்றது என்பதனை கண்டறிவதனை மையப்படுத்தி மஸ்ஜித்களுக்கு பொறுப்பாகவுள்ள தலைவர்களுக்கும், கதீப்மார்களுக்கும், பொதுமக்கள் சிலருக்கும் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு குறிப்பிட்ட பிரதேச மஸ்ஜித்களின் புனரமைப்பு பணிகள் குறித்த மக்களின் திருப்திநிலை மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு கிராமத்தில் இருந்து 10 பேர் என்ற அடிப்படையில் மொத்தமாக 50 பேர் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ஒருவருக்கொன்று என்ற அடிப்படையில் 50 வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டன. அவற்றில் பூரணப்படுத்தப்பட்ட 50 வினாக்கொத்துக்களில் இருந்தும் மஸ்ஜித்களின் புனரமைப்பு பணிகள் குறித்த மக்களின் திருப்தி நிலை கண்டறியப்பட்டது. மஸ்ஜித் தலைவர்கள், கதீப்மார்கள், பிரதேசத்தின் கல்விமான்கள்,மஸ்ஜித் நிர்வாகிகள், பொதுமக்களில் ஒரு சிலரை நேரடியாகச் சென்று நேர்கண்டதன் மூலமாகவும் குறிப்பிட்ட பிரதேசத்தில் மஸ்ஜித்கள்


சமூகப்புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படுவதில் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளும் கண்டறியப்பட்டதுடன் எதிர்காலத்தில் மஸ்ஜித்கள் முன்மாதிரிமிக்க நிறுவனமாகத் தொழிற்பட எவ்வாறான திட்டங்களை ஆய்வுப்பிரதேச மக்கள் மஸ்ஜித் நிர்வாகிகளுடன் இணைந்து மேற்கொள்ளலாம் என்பதற்கான ஆலோசனைகளும் பெறப்பட்டன.


**கலந்துரையாடலும் பெறுபேறுகளும் (Discussion and result)**


இவ்வாய்விற்காக வழங்கப்பட்ட வினாக்கொத்துக்கள் சமூகப் புனரமைப்பில் மஸ்ஜித்களின் பங்களிப்பு ஆன்மீக, மார்க்க விழிப்புணர்வூட்டல்,கல்வி, அரசியல்,குடும்ப சீராக்கம், பொருளதாரமும் வறுமை ஒழிப்பும், சமூக ஐக்கியம், சுகாதாரம், ஒழுக்கம் என பல பகுதிகளை மையப்படுத்திய நடைமுறைகள் மதிப்பிடப்பட்டன. இந்த அடிப்படையில் பிரதேச மக்களுக்கு வழங்கப்பட்ட வினாக்கொத்துக்களில் ஆன்மீகம், மார்க்க வழிப்புணர்வூட்டல் சார் பணிகள், கல்விசார் பணிகள், அரசியல சார் பணிகள், பொருளாதாரமும் வறுமை ஒழிப்பும் சார்ந்த பணிகள், சிறந்த குடும்ப உருவாக்கம், சுகாதாரப்பணிகள் சமூக ஐக்கியம், ஒழுக்கம் சார் பணிகள் என ஏழு வகைகளாக அவை வகைப்படுத்தப்பட்டன.


மேற்குறிப்பிடப்பட்ட தலைப்புக்களை உள்ளடக்கிய பல புனரமைப்புப்பணிகளில் ஒவ்வொரு பணிகளிலும் பிரதேச மக்கள் எந்த அளவு திருப்தி நிலையை கொண்டிருந்தனர் என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகளை பின்வரும் வரைபடங்கள் தெளிவுபடுத்துகின்றன.


**வரைபடம் 01**






மேற்காட்டப்பட்ட வரைபடங்களை நோக்கும் போது ஆன்மீகம்,மார்க்கவிழிப்புணர்வூட்டல், பணிகளில் பிரதேச மக்களின் திருப்தி நிலை முறையே கொல்லன்குட்டிகம மஸ்ஜித், கெகிராவை மஸ்ஜித்களில் (13மூ) மாக உள்ளன. உள்பொத்த மஸ்ஜித் (10மூ) பெற்றுள்ளது ஒப்பீட்டளவில் இது ஏனையவற்றோடு குறைந்த அளவாகும்.


ஒழுக்கம் சார் பணிகளை நோக்கும் போது கெகிராவை, கனேவல்பொல, கொல்லன்குட்டிகம ஆகியவற்றின் பணிகள் மீதான மக்களின் திருப்தி நிலை சம அளவில் (9மூ) உள்ளன. நிக்கவெவ மஸ்ஜித் 12மூ மாகவும் உள்பொத்த மஸ்ஜித் 10மூமாகவும் உள்ளன. ஒப்பீட்டளவில் ஒழுக்கம்சார் பணிகளில் நிக்கவெவ மஸ்ஜிதின் பணிகள் மீதான மக்களின் திருப்திநிலை அதிகமாகும். பொருளாதாரப்பணிகள் மீதான மக்களின் திருப்திநிலையில் நிக்கவெவ உள்பொத்த, கொல்லன்குட்டிகம ஆகியன 9மூ உள்ளன.கெகிராவை மஸ்ஜித் 12மூ மாகவும் கனேவல்பொல மஸ்ஜித் 8மூ தினையும் கொண்டுள்ளது. இவற்றிலும் கெகிராவை மஸ்ஜிதின் பணி மீதான மக்களின் திருப்தி நிலை ஒப்பீடளவில் அதிகமாக உள்ளது. கல்விப்பணியை நோக்கும் போது கல்விப்பணிகளில் கனேவல்பொல, கெகிராவை போன்றன (14மூ) தினைப் பெற்றுள்ளது. ஒப்பீட்டளவில் நிக்கவெவ மஸ்ஜிதின் கல்விப்பணி மீதான மக்களின் திருப்திநிலை குறைவான இடத்தினை பெற்றுள்ளது. இது 11மூ வீதமாகும்.

குடும்ப சீராக்கப்பணிகள் மீதான மக்களின் திருப்தி நிலையில் நிக்கவெவ மஸ்ஜித் அதிகமாக (14மூ) உள்ளது. குறைவான திருப்திநிலையை (12மூ) கனேவல்பொல, கொல்லன்குட்டிகம ஆகிய மஸ்ஜித்கள் பெற்றுள்ளன.சுகாதாரப்பணிகள் மீதான மக்களின் திருப்தி நிலையில் உள்பொத்த மஸ்ஜித் மீதான மக்களின் திருப்தி நிலை (20மூ) ஆகும். ஒப்பீட்டளவில் இம்மஸ்ஜிதின் சுகாதாரப்பணியில் மக்களின் திருப்தி நிலை அதிகமாக உள்ளது.குறைவான திருப்திநிலையை (14மூ) நிக்கவெவ, கெகிராவை மஸ்ஜித்கள் பெற்றுள்ளன.அரசியல் சார் பணிகள் மீதான மக்களின் திருப்திநிலையில் அதிகமான வீதத்தினை(19மூ) நிக்கவெவ, கனேவல்பொல மஸ்ஜித்களும் குறைவான திருப்திநிலையை கெகிராவை மஸ்ஜிதும் பெற்றுள்ளது.சமூக ஐக்கியம் சார் பணிகளில் உள்பொத்த ,நிக்கவெவ ஆகிய மஸ்ஜித்களின் பணிகள் மீதான மக்களின் திருப்திநிலை மிகக்குறைவாக (10மூ) கவும் கொல்லன்குட்டிகம், கனேவல்பொல ஆகியவை மீதான மக்களின் திருப்திநிலை அதிகமாகவும் (12மூ) உள்ளன. கெகிராவை மஸ்ஜித்தின் இப்பணி மீதான மக்களின் திருப்திநிலை 11மூமாக உள்ளது.

பின்வரும் வட்டவரைபடமானது ஆய்வுப்பரதேச மஸ்ஜித்களின் சகலதுறைசார் பணிகள் குறித்த மக்களின் திருப்திநிலையை காட்டுகின்றது இதனை நோக்கும் போது அனைத்து மஸ்ஜித்களிலும் கெகிராவை மஸ்ஜித்களின் பணிகள் மீதான மக்களின் தீருப்தி நிலை 27 மூ மாக அமைந்துள்ளது. ஆகக்குறைவான திருப்தி நிலையை நிக்கவெவ மஸ்ஜித் பெற்றுள்ளது. ஆகக்கூடுதலான மக்களின் திருப்திநிலையை பெற்றுள்ள மஸ்ஜிதிற்கும் ஆகக்குறைந்த திருப்திநிலையைப் பெற்றுள்ள மஸ்ஜிதின் திருப்தி நிலைக்கும் இடையிலான வேறுபாடு 11 மூ ஆகும்.

பின்வரும் வரைபடமானது கெகிராவைப்பிரதேசத்தில் அமைந்துள்ள ஐந்து மஸ்ஜித்களினதும் பணிகள் குறித்த மக்களின் திருப்திநிலையின் பொதுவான தன்மையை தெளிவபடுத்துகின்றன.

வரைபடம்-02




***கெகிராவைப் பிரதேசத்தின் ஐந்து மஸ்ஜித்களினதும் பணிகள் குறித்த மக்களின் திருப்திநிலை.***

இந்த வரைபடத்தில் அனைத்து மஸ்ஜித்களதும் பணிகள் மீதான மக்களின் திருப்திநிலை பொதுமையாக்கம் செய்து விளக்கப்படுகின்றது. இந்த ஆய்வின் முடிவுகள் நிக்கவெவ என்ற மஸ்ஜித்தின் சமூகப் புனரமைப்புப் பணியில் மக்களின் திருப்தி நிலை போதியதாக இல்லை என்பதைக் காட்டுகின்றது.இவற்றின் பணி 16மூமாக அமைந்துள்ளது. இதற்கு மஸ்ஜிதை சிறப்புற கொண்டு நடாத்துவதற்குரிய தகைமையுடைய தலைவர்கள் இருந்த போதும் பிரதேச மக்களின் ஐக்கியமின்மை, அடிக்கடி எல்லா விடயங்களுக்கும் முரண்படுகின்றமை,மஸ்ஜித் வியடங்களில் ஆர்வம் காட்டாமை, ஒருவருக்கொருவர் கொண்டுள்ள பொறாமை, சுயநலம், ஒத்துழைப்பின்மை, திட்டமிடல் இன்மை, அதிகார மோகம், மனித வளங்களை சரியாக பயன்படுத்தாமை,மஸ்ஜிதின் பணிகளை குறிப்பிட்ட விடயங்களோடு மாத்திரம் மட்டுப்படுத்தியுள்ளமை, மஸ்ஜித்களின் பணி குறித்து மக்களுக்கும், நிர்வாகிகளுக்கும் போதிய அறிவின்மை, பன்முகப்படுத்தப்பட்ட இயக்க நிர்வாகமின்மை, என பல விடயங்கள் காரணமாக கூறப்பட்டது.

பொதுவாக அனைத்து மஸ்ஜித்களிலும் ஆன்மீகம் சார், மார்க்க விழிப்புணர்வூட்டல் விடயங்கள் உட்பட சிறந்த குடும்ப உருவாக்கத்திற்கான நடைமுறைகள், கல்வி செயற்பாடுகள், பொருளாதார நடைமுறைகள், வறுமை ஒழிப்புப் பணிகள்,அரசியல் விவகாரங்கள்,சுகாதாரப்பணிகள்,ஒழுக்கம்சார் பணிகள் குறித்த விடயங்கள் ஓரளவு இடம்பெற்ற போதும் அவை குறித்த மக்களின் திருப்திநிலை போதியதாக இல்லை. பெரும்பாலான மஸ்ஜித்களின் பணி வெறும் வணக்க வழிபாடுகளுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது. இதற்கு கெகிராவை மஸ்ஜித் மாத்திரம் விதிலக்காக அமைந்துள்ளது. இங்கு மாத்திரமே மேற்குறிப்பிட்ட நடைமுறைகளில் பெரும்பாலானவை அமுல்படுத்தப்படுவதில் மக்கள் அதிக திருப்தி (27மூ)கொண்டுள்ளதனை

ஆய்வின் மூலம் அறிய முடிந்துது. இதற்கு பொருத்தமான நிர்வாக ஆளுமை, நகர்புறத்தில் மஸ்ஜித் அமைந்துள்ளமை, அனைத்து பிரதேசத்தைச் சார்ந்த மக்களையும் உள்வாங்கிய நிர்வாகம், சிறந்த பொருளாதார, மனித, பௌதீக வள வசதிகள், மாற்றுமத சகோதரர்களோடு இணைப்பாக்கங்களைக் கொண்டுள்ளமை,பிரதேச மக்களின் ஒத்துழைப்பு, பிரதேச இளைஞர் சங்கங்களின் துடிப்புமிக்க செயற்பாடுகள், அரசியல் ஒத்துழைப்பு போன்றன பிரதான காரணங்களாக மஸ்ஜித் நிர்வாகிகளினாலும் பொதுமக்களினாலும் கூறப்பட்டது. இருந்தும் நூலகங்கள் அமைத்தல் பெரும்பவங்களுக்கான தண்டனைகள் நிறைவேற்றல் போன்ற நடைமுறைகளை அமுல்படுத்துவதல் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் இலங்கையில் சிவில் சட்டத்தில் ஹத் நிறைவேற்றுவதற்குரிய அனுமதியின்மை ஒரு பிரச்சினையாக இருப்தாக மஸ்ஜித் நிர்வாகிகள் குறிப்பிட்டனர்.

இங்கு ஐந்து மஸ்ஜித்களிலும் ஒப்பீட்டளவில் ஆகக் கூடுதலாக புனரமைப்புப் பணிகள் இடம்பெறும் கெகிராவை மஸ்ஜிதினதும் குறைவான புனரமைப்புப்பணிகள் இடம்பெற்றுவரும் நிக்கவெவ மஸ்ஜிதினதும் பணிகள் குறித்த மக்களின் திருப்திநிலைகளுக்கிடையிலான வேறுபாடு 11மூ மாகும.கனேவல்பொல, உள்பொத்த,கொல்லன்குட்டிகம ஆகிய மஸ்ஜிதின் பணிகள் குறித்த மக்களின் திருப்திநிலை முறையே 19மூஇ18மூஇ20மூ ஆக அமைந்துள்ளன. எனவே நிக்கவெவ மஸ்ஜித்துடன் இணைந்து ஏனைய மஸ்ஜித்களும் இன்னும் வேகமாக தனது புனரமைப்புப் பணிகளை நோக்கி தன்னை நகர்த் வேண்டிய கடமைப்பாடு உள்ளது என்பதனை இதன் முடிவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

**கண்டறிந்தவை (Findings)**

- ஆய்வுப் பிரதேசத்தின் ஓரிரு மஸ்ஜித்கள் சமூக புனரமைப்பில் தமது பங்களிப்பினை ஓரளவுக்கேனும். அமுல்படுத்துகின்ற அதே நேரம் இன்னும் சில மஸ்ஜித்கள் உயிரோட்டமின்றி இயங்குகின்றன.
- பெரும்பாலான மஸ்ஜித்கள் ஆன்மீகம் சார் விடயங்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தினை சமூகத்தின் ஏனைய துறைகளுக்கும் கொடுக்காமையினால் அவற்றை மையப்படுத்திய புனரமைப்புப் பணிகள் குறைவாகவே இடம்பெறுகின்றன.
- இமாம்களுக்கான பொருத்தமான சம்பளமின்மை, பொதுமக்கள் ஐக்கியமின்மை, நிர்வாகிகளின் சுயநலமான போக்கு ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள பொறாமை, பொதுநலன்களில் மக்கள் ஆர்வம் காட்டாமை, மஸ்ஜித்களின் பணி குறித்து மக்களுக்கு போதிய விளக்கமின்மை, · பிரதே மக்களின் மஸ்ஜித்களுடனான தொடர்புகள்துண்டிக்கப்பட்டிருத்தல், வெறுமனே தொழுகைக்காக மட்டும் பயன்படுத்தப்பட்டால் போதும் என்ற மனோநிலை, ஆய்வுப் பிரதேசங்களில் சமூக நல இயக்கங்கள் அரிதாக காணப்படுகின்றமை, இருக்கின்ற ஓரிரு அமைப்புக்களும் மஸ்ஜித்களுடன் தொடர்பற்று இயங்குகின்றமையும், இயக்கங்களுக்கடையில் ஐக்கியமின்மை இருக்கின்ற ஓரிரு இயக்கங்களதும் பணிகள் போதியதாக இன்மை, போன்ற பல விடயங்கள் மஸ்ஜித்களின் அனைத்துத் துறைகளையும் மையப்படுத்திய பணிகள் விரிவுபடுத்தப்படாமல் இருப்பதற்கான காரணங்களாக கண்டறியப்படன.

எனவே இப்பிரதேசத்தில் ஆய்வாளனினால் எதிர்பார்க்கப்பட்ட புனரமைப்புப் பணிகள் குறிப்பிட்ட மஸ்ஜித்களினால் மேலும் விரிவுபடுத்தப்பட்டு சிறப்பாக இயங்ககின்ற மஸ்ஜித்களுடன் கால வேகத்திற்கேற்ப இயைந்து செல்ல வேண்டிய கடப்பாடும் பொறுப்பும் உள்ளது. எனவே இவற்றின் பணிகளை மேலும் விரிவுபடுத்த பிரதேச மக்கள் மஸ்ஜித் தலைவவர்களுடனான நேர்காணல் மூலம் அவர்களினால் குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளுக்கேற்ப பின்வரும் பரிந்துரைகள் ஆலோசனைகளாக முன்வைப்பதன் ஊடாக குறிப்பிட்ட ஆய்வுப்பிரதேசத்தில் மஸ்ஜித்களின் பணியை மேலும் விரிவுபடுத்த முடியும் என இவ்வாய்வின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

**ஆலோசனைகள்**

- மஸ்ஜிகள் சமூகத்திற்கு ஆற்றவேண்டிய பணிகள் குறித்து அனைத்து மக்களும் அறிந்து கொள்வதற்காக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல்.
- சமூக பணிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ள பிற மஸ்ஜித்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவற்றின் பணிகளை முன்மாதிரியாகக் கொண்டு செயற்பட முயற்சித்தல்
- மஸ்ஜித் நிர்வாகிகளின் தெரிவுகளை தகைமை அடிப்படையில் அமைத்துக் கொள்ளலும் தகைமையற்ற நிர்வாகிகளை பதவிலக்கி பொருத்தமானவர்களை தெரிவு செய்தலும்
- துறைசார்ந்தவர்களை மஸ்ஜித் நிர்வாக குழுக்களுக்குள் உள்வாங்கி நியமித்தல் உ-ம் குடும்பம் தொடர்பான பிரச்சினைகளை விசாரிக்க சட்டத்தரணிகள், கல்விமான்கள் பொருளாதார பிரச்சினைகளுக்கு பொருளாதார துறைசார் நிபுணர்கள்
- பிரதேசத்தில் இளைஞர் சங்கம், பொருளாதார சங்கம்,மகளிர் சங்கம் போன்ற அமைப்புக்கள் மஸ்ஜித்களுடன் இயைந்து செயலாற்றப் துணைபுரிதல்
- அடிப்படையான வணக்க வழிபாடுகளில் ஈடுபடாதவர்களுக்கு சமூக ஒதுக்கல் போன்ற தண்டணைகளை வழங்கள் அல்லது மஸ்ஜித்களினால் அவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகளை இடை நிறுத்தல்
- பிரதேசங்களில் இயங்கிவரும் அனைத்து இயக்கங்களையும் ஒன்றுபடுத்தி சமூகப் பணிகளை ஒன்றாக இயைந்து செயற்பட தூண்டுதல்
- பைத்துல்மால்கள் இயங்காத மஸ்ஜித்களில் அவற்றின் பணியை துரிதமாக செயற்படுத்த உரிய நபர்களுடனான தொடர்பாடல்களை எற்படுத்துதல்
- அரசியல் வாதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி மஸ்ஜிதகளுக்குத் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்
- மஸ்ஜித் இமாம்களுக்கு போதிய சம்பளங்களை வழங்கள் ஊடாக அவர்கள் ஆர்வத்துடன் மஸ்ஜித் பணிகளை முன்னெடுக்க வழியமைத்தல்
- குத்பாக்களை காலத்திற்கேற்றவாறு முஸ்லிம்களின் சமகாலத்தேவையைக் கருத்திற் கொண்டதாக மாற்றியமைத்தல்
- பிரதேசத்திற்கென ஒழுக்காற்று கோவைகளை வடிவமைத்து செயற்படுத்தல்
- பொதுப்பணிகளில் மக்களை ஈடுபடுத்துவதற்கான ஆர்வத்தை ஏற்படுத்தல்

- பெற்றோர்கள் பிளளைகளுடனான மஸ்ஜித்களின் தொடர்புகளை அதிகரித்தல்
- மஸ்ஜித்களை விட்டு முஸ்லிம்கள் தமது பணிகளை தூரப்படுத்தும் போது எற்படும் பிரசசினைகளை மக்களுக்கு எடுத்துக்காட்டுதல்
- சுயநலங்களை விட்டு மஸ்ஜித் நிர்வாகிகள் இறைவனுக்காக அமானிதமாக மஸ்ஜிதின் சகல நடவடிக்கைகளையும் சிறப்பாக நடைமுறைப்படுத்த முற்சித்தல்
- பெரும்பாவங்களில் ஈடுபடுவொருக்கு எதிராக தண்டணைகளை மஸ்ஜித்கள் நடைமுறைபபடுத்தல். அக்கறையின்மை இன்னும் அவர்கள் அப்பாவச் செயல்களில் ஈடுபடுத்தத் தூண்டும், காரணம் சில பிரதேசங்களில் வட்டி அதிகரித்து வரும் ஒரு சமூகப் பிரச்சினையாக இனங்காணப்பட்டது.
- இன நல்லிணக்கத்தை உருாக்குவதற்காக ஸகாத் வசூலிக்கும் மஸ்ஜித்கள் பிற மதத்தவர்களுக்கும் அதிலிருந்து ஒரு தொகையை வழங்கல்.

**முடிவுரை**

முஸ்லிம்கள் எங்கு வாழுந்தபோதும் தமது தனித்துவங்களைப் பேணுவதோடு தாம் எதிர்கொள்ளும் அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வுகளையும் மஸ்ஜித்கள் ஊடாகவே எட்டமுடியும். இதன் அடிப்படையில் கெகிராவைப்பிரதேசத்தில் அமைந்துள்ள மஸ்ஜித்களின் பணிகளை மையப்படுத்தியதாக மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வின் மூலம் ஆய்வுப்பிரதேசத்தில் அமைந்துள்ள பெருமபான்மையான மஸ்ஜித்களின் பணி போதியதாக இல்லை என்பது கண்டறியப்பட்டது. எனவே கால மாற்றத்திற்கேற்றவாறு சமூக நலப்பணிகளை முன்னெடுத்துச் செல்லும் பிற மஸ்ஜித்களுடன் இணைந்து வேகமாக இவை பயணிப்பதன் மூலமும் தமது உள்ளார்ந்ந பலவீனங்களையும், வெளியே இருந்து எதிர்நோக்கும் சவால்களையும் சரியாக இனங்கண்டு பொருத்தமான ஆளுமைகளைக் கொண்டு நுண்ணிய திட்டங்களை வகுத்து மேற்குறிப்பிட்ட ஆலோனைகளையும் முன்னெடுப்பதன் மூலமும் குறிப்பிட்ட ஆய்வுப்பிரதேசத்தில் முஸ்லிம் சமூகத்தினது வெற்றிக்கும் சமூக நல சீராக்கத்திற்கும் பங்காற்றக் கூடிய பொருத்தமான ஒரு நிறுவங்களாக மஸ்ஜித்கள் செயற்பட முடியும் என்பதனை இவ்வ்ாய்வு முடிவாக உரைக்கின்றது.

**உசாத்துணைகள்**

**நூல்கள்**


1. **Muhideen M.I.M , "*Hand book to Resolve Anti-Muslim activities By the Sinhala Budhist Supporters of Bodu Bala Sena and Jathika hela Urumaya In Srilanka*",(2014), Al-Ceylan Muslim Documentation Centre.**
2. **அகார் ஏ.ஸீ.எம் " மஸ்ஜித்களும் சமூகப் புனரமைப்பும்" (1999),**

**சஞ்சிகைகள்**

3. Seikh M.saleh al –Qazzaz, **The Voice of islam "*The Role of Mosque in Muslim Society"(*(1975), The MWL Journal, vol.2 No .12** **Muhammad Hussein Dahal *"The role of mosque in a muslim society*",The MWL journal,Vol.2 No.12.**
4. **Masjid –*A center of Islamic activity* by Davud Assad,the MWL journal,Vol.6 No.2.,December 1978.**
5. **Muhammad Baqir Ansari *"The role of the Masjid in islam"* ,Vol.1 No.4.,july-1894;(tr.) The lamic Foundation,Srilanka (undated)**
6. நௌஸாத், ஏ.எஸ்.எம்., பயணம், ***"ஊரை இஸ்லாமியமயப்படுத்துவதில் மஸ்ஜிதின் பங்களிப்பு"*** *( இதழ் :50 மார்ச் 2017), ஸலாமாஹ் பப்ளிகேஷன், கொழும்பு*
7. ஏ.பீ.எம் அலியார், மீலாத் மலர் **"சமூக புனரமைப்பில் மஸ்ஜிதுகளின் பங்கு" (2015)**

**பத்திரிகைகள்**

1. மீள்பார்வை "பள்ளிவாயல்களை நடுநிலைப்படுத்தல்" (மார்ச்:இதழ் 364), பக்: 05
2. அஸ்லம் ஒஸ்மான், மீள்பார்வை "***பள்ளிவாயல்களை மீண்டும் சமூகத்தின் மையமாக மாற்ற வேண்டிய தேவை இருக்கின்றது*"** (பெப்ரவரி:இதழ் 363), பக்: 10.

**நேர்காணல்**

1. சுல்த்தான், எம்.ஸீ.எம்., தலைவர், (நிக்கவெவ ஜும்ஆ மஸ்ஜித்),நிக்கவெவ 3.29.2017.
2. ரபீக். ஏஸ்.எல்., தலைவர், (கெகிராவ ஜும்ஆ மஸ்ஜித்), 3.28.2017.
3. லரீஸ் ஏ.எம்.,இமாம், (மஸ்ஜிதுல் அஸ்ஹர் ஜும்ஆ மஸ்ஜித்) கனேவல் பொல, 3.28.2017.
4. சமீன் ஐ.எஸ்.எம்.,தலைவர், (மஸ்ஜிதுல் அஸ்ஹர் ஜும்ஆ மஸ்ஜித்) கனேவல் பொல), 3.28.2017.
5. ரஸீட் ஏ.ஸீ.எல்,ஏ.,நிர்வாக உறுப்பினர், (மஸ்ஜிதுல் அஸ்ஹர் ஜும்ஆ மஸ்ஜித்) கனேவல் பொல 3.28.2017.
6. ஸகூர் என்.பீக்., நிர்வாக உறுப்பினர், (மஸ்ஜிதுல் அஸ்ஹர் ஜும்ஆ மஸ்ஜித்) கனெவல் பொல, 3.28.2017.
7. சுபைர எம்., நிர்வாக உறுப்பினர், (நிக்கவெவ ஜும்ஆ மஸ்ஜித்), உள்பொத்த, 3.30.2017.
8. உதுமான், எம்,பீ., நிர்வாக உறுப்பினர், (நிக்கவெவ ஜும்ஆ மஸ்ஜித்), நிக்கவெவ,3.30.2017.
9. ரிபாய்தீன், எம்.,கொல்லன்குட்டிகம, 28.03.2017
10. மஹ்ருப், எம்., தலைவர், (கொல்லன்குட்டிகம ஜும்ஆ மஸ்ஜித்), கொல்லன்குட்டிகம 28.03.2017
11. மஜீத், ஏ.எல்., தலைவர், (உள்பொத்த ஜும்ஆ மஸ்ஜித்), உள்பொத்த, 3.4.2017
12. ஹாஸிம் ,ஏ.எல்., செயலாளர், (உள்பொத்த ஜும்ஆ மஸ்ஜித்), உள்பொத்த, 3.4.2017
13. றிஸ்வான், என்., நிர்வாக உறுப்பினர் (உள்பொத்த ஜும்ஆ மஸ்ஜித்), உள்பொத்த, 3.4.2017
14. தஸ்லிம், எச்,ஆசிரியர், (கனேவல்பொல மு.மு.வி), கனேவல்பொல 25.04.2017